**O.S.No. 253/2018**

**Dated 12.03.2025**

**வா.சா.1 வேலு**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை கிரையம் பெற்றது குறித்து கிரைய ஆவணத்தில் இடம் பெற்ற வாசகங்கள் குறித்து எனக்கு தெரியும். கருப்பாயிஅம்மாளின் கணவர் பெயர் கருப்பையா தேவர் ஆகும். மேற்படி கருப்பையா தேவரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சங்குமணியாரம் தேவர் ஆகும். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கருப்பாயிஅம்மாளுக்கும் அவர்களின் வாரிசுகளுக்கு பூர்வீக பாத்தியமாகவும், நன்கொடை மூலமாகவும் பாத்தியப்பட்டது என உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தை வாங்குவதற்கு முன்பு சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழில் சொத்து சம்பந்தமாக குறிப்புகள் இருந்ததா என்றால் நான் வாங்கிய சொத்தும் வில்லங்க சான்றிதழும் சரியாக இருந்தது. மேற்படி வில்லங்க சான்றிதழில் வேறு எந்த குழப்பங்களும் இல்லை. மேற்படி வில்லங்க சான்றிதழை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் எந்தவொரு வில்லங்க சான்றிதழையும் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக வில்லங்க சான்றிதழை பார்த்தாக கூறுகீறிர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1968 ல் ஆவண எண். 1351/1968 என பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் மூலமாக தான் வழக்கு மூலம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நன்கொடை மூலமாக பாத்தியப்பட்டதாக கூறுவதற்கு மேற்படி நன்கொடை ஆவணத்தை குறித்து கிரையம் பெற்றவர்களிடம் வாங்கி நான் பார்க்கவில்லை என்றால் அவர்கள் கொடுக்கவில்லை. நானும் அந்த ஆவணத்தை பார்க்கவில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக தாவா சொத்திற்கு உரிமை மூலம் வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட நான்கு மால்களும் வா.சா.ஆ.1 ல் கண்ட கிரைய மால்களும் ஒத்துபோகவில்லை காணப்படுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி தாவாசொத்தின் தென்புறம் ஸ்ரீரங்கராஜ் சொத்து உள்ளது என்றால் சரிதான். 1968 தான ஆவணத்தின் மூலமான சொத்திற்கு தெற்கு எல்லை குருசாமி பாண்டியன் என்பவருடையது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி கிழக்கு எல்லை சுப்பையா தேவருக்குரியது என்றால் சரிதான். 1968 தான ஆவணம் மூலமான கிழக்கு எல்லையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 1975 க்கு முன்பு அந்த சொத்தின் தன்மை எனக்கு தெரியாது. வா.சா.ஆ–1 கிரையதாரர் ஆன கருப்பாயி அம்மாள் காலமாகி 10 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை தெரியாமல் தான் முதல் நிலை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1968 தான செட்டில்மெண்ட் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கு கருப்பாயி அம்மாள் மட்டும் உரிமையாளர்கிடையாது என்றாலும் கருப்பயைா தேவரும் அதனுடைய கூட்டுஉரிமையாளர் என்றால் சரியல்ல. கருப்பாயி அம்மாள், கருபையா தேவர் மற்றும் அவர்களின் மக்களுக்கும் இந்த சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அப்பொழுது அந்த மக்கள் மைனர்களாக இருந்தார்கள். வா.சா.1 ஆவணம்எழுதப்பட்ட காலத்தில் 21 வயது வீரமணி பூர்த்தி அடைந்த மேஜர் என்றால் சரியல்ல. 14.01.1954 ல் வீரமணி பிறந்துள்ளார். அதற்கான அரசு ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வீரமணி புத்திசுவாதீனமில்லாத நபர் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே புத்தி சுவாதீனம் இல்லாமல் தான் இருந்தார். புத்தி சுவாதீனம் இல்லாத நபரின் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிய காப்பாளரை நியமிக்கமல் தாக்க்ல செய்த இவ்வழக்கு நிலைநிறுத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புல எண். 679/2 க்கான வருவாய் ஆவணங்கள் குறித்து நான் பார்க்கவில்லை. புலஎண் 682/பகுதி உண்மையான புல எண் என்றால் சரியல்ல. 679/2 தான் உண்மையான புல எண் ஆகும். வழக்குப்படி 682/பகுதி என்ற புல எண்ணில் கட்டுப்பட்ட சொத்திற்கான வருவாய் ஆவணங்களை நான் எடுத்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பட்டா நகலை எடுத்து பார்த்த பின்பு தான் சொத்தில் உள்ள வில்லங்கம் குறித்து தெரியவந்தது என்றால் இல்லை. அதற்கு முன்பே தெரியும். 2018 ல் மட்டும் தான் எனக்கு தெரியவந்தது. வா.சா.ஆ.3 யை 18.07.2024 ல் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். வா.சாஆ.3 ஆவ்வணத்தின் படி மொத்த பரப்பு 2.60 ஏர்ஸ் என்றால் சரிதான். செண்ட் கணக்கில் 6.42 என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 12.06.2018 அறிவிப்பு அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. வா.சா.2 அறிவிப்பில் புல எண் தவறாக உள்ளதாக எதன் அடிப்படையில் கூறியுள்ளீர்கள் என்றால் பட்டா கேட்டு வருவாய் அலுவலகத்திற்கு சென்றேன். பட்டா மனுதாக்கல் செய்தேன். அந்த பட்டா மனுவின் விவரங்கள் வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிராதிலும் கூறவில்லை என்றால் சரிதான். பட்டா மாறுதல் சம்பந்தமாக வருவாய் அதிகாரிகள் அளித்த உத்தரவினையும் அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருப்பாயிஅம்மாளுக்கும் வழக்கின் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து 1968 தான செட்டில்மெண்ட் ஆவணம் கிடைக்கபெற்றது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் கருப்பாயி ஆவணத்தின்படி கருப்பாயி அம்மாளுக்கு முழு உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கில் மைனர் மக்களாக கிரைய ஆவணத்தினல் காண்பித்த காரணத்தினால் அவர்களுக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. சொத்தில் உரிமை இருந்தால் தான் கிரைய ஆவணத்தில் தரப்பினர்களாக சேர்ப்பார்கள் என்றால்சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 13.01.1975 ல் எழுதப்பட்டதாக கூறி 17.01.1975 ல் தான் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் முத்திரை தாள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நாளில் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. முதல் முத்திரை தாள் 16.11.1974, 2 ம் தாள் 13.12.1974 3 ம் தாள் 31.12.1974 ஆகிய தேதிகளில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு முத்திரை தாளும் வேறு வேறு முத்திரை விற்பனையாளரிடம் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அதுபற்றி தெரியாது. ஒவ்வொரு முத்திரை தாளும் என்னுடைய பெயரிலோ அல்லது கிரையம் எழுதிகொடுத்த நபர்களின் பெயரிலோ வாங்கப்படவில்லை என்றாலும், முதல் பத்திரம் முத்து என்பவர் பெயரிலும், 2 வது மற்றும் 3 வது பத்திரம் கணேசன் என்பவர்பெயரிலும் வாங்கப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்பட்ட கால கட்டத்தில் 3 ம் தரப்பினர் பெயரில் பத்திரம் வாங்கி பதிவு செய்ய முடியாது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா–ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள நன்கொடை கண்ட சங்கதிகள் மற்றும் அதன் உரிமை மூலம் சம்பந்தமாக தற்போது வரை எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண். 679/2 என்ற எண் மட்டும் வித்தியமான மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் தாயார் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தினை எழுதி கொடுக்கவில்லை என்றாலும் , அவ்வாறு எழுதிகொடுத்திருந்தால் சரியான விவரங்களுடன் தான் எழுதி கொடுத்திருப்பார்கள் என்றும், தாவா சொத்திற்கும் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும், தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 2 அறிவிப்பில் ஆவணத்தில் புல எண் தவறாக காணப்பட்டுள்ளது என்பது குறித்து எதன் அடிப்படையில் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2018 ல் தாவாசொத்தில் வீடு கட்ட போகும்போது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா–ஆ.1 ஆவணம் வாங்கிய தேதியில் இருந்து நாளதுதேதி வரை பட்டா மாற்றம் செய்தவதற்கும் வரிவிதிப்பிற்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2018 க்கு முன்பாக நடவடிக்கை எடுத்தேன். மேற்படி எந்தமாதிரியான நடவடிக்கை எடுத்தீர்கள் என்பது குறித்து எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இது சம்பந்தமாக என்னுடைய பிராதிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் முதல் விசாரணையி்லும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்து கொடுப்பதற்கு எந்த சொத்தின் உரிமை எந்த ஆவணத்தின் மூலம் வருகிறதோ அந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் கிரையம் கொடுக்க முடியும் என்றால் சரிதான். 1968 தான ஆவணத்தின் மூலமாக வந்த சொத்து வா.சா–ஆ.1 ல் கட்டுப்பட்ட சொத்து கிடையாது என்றால் அதுபற்றி தெரியாது. 1968 ல் இருக்கும் தான செட்டில் ஆவணத்தில் கண்ட சொத்து தான் தாவா சொத்து, அதற்கும் வா.சா–ஆ்1 க்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் அதற்கு முன்பு இருந்த பிரச்சனை குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நீங்கள் சுவாதீனத்தில் இருப்பதற்கு வருவாய் ஆவணமும், சான்றாவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களுடைய வா.சா–ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை அறுதியிட்டு அடையாளப்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

அப்போதைய காலத்தில் பட்டா கருப்பாயி அம்மாள், கருப்பையா பெயரிலும் இருந்தது. பின்னிட்டு வீரமணி பெயரில் பட்டா உள்ளது. வா.சா–ஆ.1 ஆவணத்தின் அடிப்படையிலான சொத்திற்கு பிரதிவாதிகள் குடும்பதார் பெயரில் பட்டா இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா–ஆ.1 ஆவணத்தில் மைனர்களின் சொத்தாக காணப்பட்டுள்ள நிலையில் உரிய நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற்று தான் இந்த கிரையம் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற முன் அனுமதி இல்லாமல் பெறப்பட்ட இந்த கிரையம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1975 ல் இருந்து 2018 வரையிலான தாவா சொத்து சம்பந்தமாக எந்தவொரு நடவடிகக்கை எடுக்காமல் கருப்பாயி அம்மாள் இறந்தபிறகு மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்து வழக்கு தாக்க்லசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1975 வா.சாஆ.1 ஆவணத்தின் படியான சொத்து புல எண். 679/2 ல் தான் உள்ளது அந்த சொத்தின் சுவாதீனத்தில்இருந்துகொண்டு தாவா சொத்தான 686/ பகுதி சொத்திற்கு எந்தவொரு உரிமையும் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(நீதிமன்ற நேரம் மாலை 05.30 ஆகிவிட்ட காரணத்தினாலும், நீதிமன்ற ஆய்வு பணிகள் இருப்பதால் சாட்சியின் உடல் நிலையை கருத்தில் கொண்டும், நீண்ட நேரம் அமர்ந்து சாட்சி சொல்லும் சூழ்நிலை இருப்பதால் நீண்ட வாய்தா வழங்க சாட்சி கூறியதன் அடிப்படையில் 11.06.2025 தேதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**